**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.01/2025**

IN

**அசல் வழக்கு எண்.368/2015**

1. தவசி
2. மாரிமுத்து
3. முருகேஷ் ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. முருகன்
2. முத்துக்குமார்
3. வேலு
4. சரவணன் ....எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.09.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 2, 4 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதார்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கில் சங்கரன்கோவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.24 17:15:47 +0530

செயற்பொறியாளர் அவர்களை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக அழைப்பாணை அனுப்பி விசாரித்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், அசல் வழக்கு தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் தொடர் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு சொத்தான சின்னக்கோவிலான்குளம் கிராம சர்வே எண்.8 ல் உள்ள கிணற்றிற்கு 06.06.1989 ல் விண்ணப்பம் கொடுத்து எண்.85/89–90 28.06.1989 ல் என கோப்புக்கு எடுத்து மின் இணைப்பு எண்.916 என விவசாய பயன்பாட்டிற்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்பிற்கான ஆவணம் வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அது ஒரு தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி பெறப்பட்ட ஆவணமாகும் என்றும், அந்த ஆவணத்தின் தன்மை குறித்து சங்கரன்கோவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளரை விசாரிக்க வேண்டியதாயுள்ளது என்றும், அவரை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர்களது கட்சியை நிரூபிக்க இயலும் என்றும், மேற்படி சங்கரன்கோவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளர் அரசு ஊழியராவார் என்றும், தனது தரப்பில் விசாரணை செய்யவேண்டிய சாட்சியானவர் அரசு ஊழியராக இருப்பதால் இந்நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், இல்லாவிடில், மனுதாரர்களுக்கு அளவிடமுடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், ஆகையால், அசல் வழக்கில் சங்கரன்கோவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளர் அவர்களை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக அழைப்பாணை அனுப்பி விசாரித்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.24 17:15:56 +0530

2) **<u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**-

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மேற்படி வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6 ஆனது நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டு அது தொடர்பாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்து அது தொடர்பான கேள்விகள் ஏற்கனவே கேட்கப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது என்றும், இந்த நிலையில் மீண்டும் மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து மின்சாரவாரிய அதிகாரிகளை விசாரிக்க வேண்டியுள்ளது என்று கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மேற்படி ஆவணம் குறித்து வா.சா.1 ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ள நிலையில் மீண்டும் அதன் தன்மை குறித்து சாட்சியம் விசாரிக்க வேண்டி கோரியிருப்பது மீண்டும் அதே ஆவணத்தின் தன்மையை புதுப்பிக்கும் நோக்கில் உள்ளது என்றும், இது Fill Up the Lacuna மற்றும் Collection of Evidence என்ற வகைபாட்டில் வருகிறது என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது அசல் வழக்கில் சங்கரன்கோவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளர் அவர்களை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக அழைப்பாணை அனுப்பி விசாரித்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.24 17:16:05 +0530

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் வலியுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கானது வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர்களால் இம்மனுவில் அசல் வழக்கு சொத்தான சின்னக்கோவிலான்குளம் கிராம சர்வே எண்.8 ல் உள்ள கிணற்றிற்கு 06.06.1989 ல் விண்ணப்பம் கொடுத்து எண்.85/89–90 28.06.1989 ல் என கோப்புக்கு எடுத்து மின் இணைப்பு எண்.916 என விவசாய பயன்பாட்டிற்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்பிற்கான ஆவணம் வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அது ஒரு தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி பெறப்பட்ட ஆவணமாகும் என்றும், அந்த ஆவணத்தின் தன்மை குறித்து சங்கரன்கோவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளரை விசாரிக்க வேண்டியதாயுள்ளது என்றும், அவரை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர்களது கட்சியை நிரூபிக்க இயலும் என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) மனுதாரர்களின் மனுவை மறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6 ஆனது நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டு அது தொடர்பாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்து அது தொடர்பான கேள்விகள் ஏற்கனவே கேட்கப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது என்றும், இந்த நிலையில் மீண்டும் மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து மின்சாரவாரிய அதிகாரிகளை விசாரிக்க வேண்டியுள்ளது என்று கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மேற்படி ஆவணம் குறித்து வா.சா.1 ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ள நிலையில் மீண்டும் அதன் தன்மை குறித்து சாட்சியம் விசாரிக்க வேண்டி கோரியிருப்பது மீண்டும் அதே ஆவணத்தின் தன்மையை புதுப்பிக்கும் நோக்கில் உள்ளது என்றும், இது Fill Up the Lacuna

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.24 17:16:13 +0530

மற்றும் Collection of Evidence என்ற வகைபாட்டில் வருகிறது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் வா.சா.1ன் மூலமாக குறியீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.6 ஆவணமானது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழாக பெறப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) இந்நிலையில், மேற்படி வா.சா.ஆ.6னை நிரூபணம் செய்ய மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து சங்கரன்கோவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், செயற்பொறியாளர் அவர்களை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

11) மேலும், அசல் வழக்கானது தற்பொழுது வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களால் இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12) இந்நீதிமன்றமானது விசாரணை நீதிமன்றமாக உள்ள நிலையில், மனுதாரர்கள் தனது வழக்கை நிரூபிக்க போதுமான வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதி என்பதாலும், மேலும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.24 17:16:22 +0530

**14) இறுதியாக**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.24 17:16:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.24 17:16:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.01/2025
in
O.S.No.368/2015

உத்தரவு (Draft / Fair)

நாள் : 24.09.2025